# மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்
# வத்திராயிருப்பு

DVC. NO. 4/2025

அ.சா.1 – சங்கீதா, க/பெ. மாரிமுத்து

தேதி – **24.06.2025**

**<u>சத்திய பிரமாணத்தின் பேரில்  குறுக்கு விசாரணை : –</u>**

1) நான் தாக்கல் செய்துள்ள  மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். ம.சா.ஆ.5ல் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்தில் தான் நான் குடியிருந்து வருகிறேனா என்றால் இல்லை. எனது திருமணத்திற்கு முன்பு பெறப்பட்ட ஆதார் அட்டை ஆகும். நான் தற்போது வசித்து வருவதாக சொல்லியுள்ள வீட்டின் ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. திருவில்லியுத்துார் மாண்புமிகு குடும்ப நல நீதிமன்றத்தில் எனது கணவருக்கு எதிராக தாக்கல் செய்துள்ள HMOP NO.49/2016 என்ற வழக்கில் நான் வசித்து வரும் வீட்டின் கதவு எண்.1/19 என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். அது எனது திருமணத்திற்கு முன்பு எடுத்த ஆதார் அட்டையின் முகவரி ஆகும். நான் தற்போது வரை மேற்படி ஆதார் அட்டையில் உள்ள முகவரியை மாற்றம் செய்யவில்லை என்றால் சரிதான். கதவு எண். 4/450 வீட்டிற்கான புல எண் தெரியுமா என்றால் தெரியாது. நான் திருமணத்திற்கு முன்பே திருவில்லிபுத்துார் காவல் நிலையத்தில் திருமணம் செய்து வைக்கும்படி 1வது எதிர் மனுதாரர் புகார் மனு கொடுத்திருந்தார் என்றால் சரிதான். அதற்கு பின்னிட்டுத்தான் எனக்கும் 1வது எதிர் மனுதாரருக்கும் மதுரையில் வைத்து திருமணம் நடந்தது என்றால் சரிதான்.  திருமணத்திற்கு பின்பு நானும், 1வது எதிர் மனுதாரரும் எனது சித்தப்பா வீட்டில் வசித்து வந்தோம் என்றால் 1வது எதிர் மனுதாரர் வீட்டில் வசித்து வந்த பின்பு தான் எனது சித்தப்பா வீட்டில் வசித்து வந்தோம். நான் பொய்யாக சாட்சியம் அளித்தால் என் மீது நீதிமன்ற நடவடிக்கை எடுக்கலாம் என்றால் சாட்சி எடுங்க என்று சொல்கிறார். மாண்புமிகு குடும்ப நல நீதிமன்றத்தில் தாக்கல் செய்தள்ள மனுவில் பாரா 5ல் நான் 1வது எதிர்மனுதாரரும் திருமணம் முடிந்த பின்பு சுமார் 6 மாத காலமாக வீடு எடுத்து தனியாக குடித்தனம் செய்து வந்தததாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மாண்புமிகு குடும்ப நல நீதிமன்றத்தில் HMOP NO.49/2016 நான்  தாக்கல் செய்துள்ள **மனுவின் சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 1வது எதிர்

மனுதாரர் விவாகரத்து கோரி மாண்புமிகு குடும்ப நல நீதிமன்றத்தில் HMOP NO.72/2015 என்ற வழக்கு தாக்கல் செய்தாரா என்றால் சரிதான். 1வது எதிர் மனுதாரர் விவாகரத்து கோரி வழக்கு தாக்கல் செய்த ஒரு வருடத்திற்கு பின்பு நான் நீதிமன்றத்தில் வாழ்வுரிமை மீட்டளிப்பு பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். திருமண சமயத்தில் 1வது எதிர் மனுதாரருக்கு 10 பவுன் தங்க நகை ரூ.20,000/- ரொக்கம் மற்றும் ரூ.1,00,000/- மதிப்பிலான வீட்டு உபயோக பொருட்கள் கொடுத்தற்கான ஆவண விபரங்களையும் மாண்புமிகு குடும்ப நல நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

2) எனக்கும், 1வது எதிர் மனுதாரருக்கும் பிரச்சனை ஏற்பட்டு மாண்புமிகு குடும்ப நல நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மனுவில் 3 - 8 வரையிலான எதிர்மனுதாரர்கள் விலாசங்களை குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 4வது எதிர் மனுதாரர் மற்றும் 5 வது எதிர் மனுதாரர் அரசு ஊழியர்கள் என்றால் சரிதான். மேற்படி 3-8 வரையிலான எதிர் மனுதாரர்கள் மனுவில் சொல்லியுள்ள விலாசத்தில் தான் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். 1வது எதிர் மனுதாரர் மீது ஜீவானாம்சம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1வது எதிர் மனுதாரரிடம் இருந்து ஜீவானாம்சமாக மாதம் ரூ.8,000/- பெற்று வருகிறேன் என்றால் சரிதான். மாண்புமிகு குடும்ப நல நீதிமன்றத்தின் CrMP No.59/2023 என்ற வழக்கின் **"B-Diary" ன் சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் தற்பாது மாண்புமிகு குடும்ப நல நீதிமன்றத்தில் CrMP No.5/2025 என்ற மனுவில் ஜீவனாம்சம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி மனுவில் வாய்தா 16.07.2025 ஆகும்.

3) 1வது எதிர் மனுதார் என் மீது தாக்கல் செய்த விவாகரத்து வழக்கின் நீதிமன்ற அழைப்பாணையை 15.10.2015ம் தேதியில் கையொப்பம் செய்து பெற்றுக் கொண்டேன் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் இருந்து அனுப்பப்பட்ட **அழைப்பாணையின் சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி தேதியில் தான் 1 - 6 எதிர் மனுதாரர்கள் மீது வரதட்சணை கேட்டதாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் 3வது எதிர் மனுதாரர் மீது அத்துமீறி நுழைந்ததாகவும், என்னை வெளியேற்றுவதற்காக நீதிமன்றதில் அசல் வழக்கு எண்.173/2025 என்ற வழக்கு தாக்கலாகி நிலுவையில் இருந்து வருகிறது என்றால்

சரிதான். நான், 1வது எதிர் மனுதாரர் மீது தாக்கல் செய்த வாழ்வுரிமை மீட்டளிப்பு வழக்கை அனுமதித்த பின்பு தான் 1வது எதிர் மனுதாரர் வீட்டை 3வது எதிர் மனுதாரர் மீது மாற்றியுள்ளார். மேற்படி வீட்டின் உரிமையாளர் 1வது எதிர் மனுதாரரோ அல்லது அவரது தகப்பனாரோ என்பதை காண்பதற்காக எந்த ஆவணம் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் 1வது எதிர்மனுதாரரின் தாயார் பெயரில் உள்ளது. தாயார் பெயரில் உள்ள வீட்டை தான் 3வது எதிர் மனுதாரருக்கு உரிமை மாற்றம் செய்து கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அசல் வழக்கு எண். 173/2025 தாக்கல் செய்த பின்பு தான் 1 – 8 எதிர் மனுதாரர்கள் மீது இந்த வழக்கினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதே போல் திருவில்லிபுத்தூர் மாண்புமிகு குடும்ப நல நீதிமன்றத்தில் MC No.15/2021 தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். 1வது எதிர் மனுதாரர் எனக்கு எதிராக விவாகரத்து வழக்கு தாக்கல் செய்த நாளில் இருந்து இன்று வரை எந்த பேச்சு வார்த்தையும் கிடையாது என்றால் சரிதான்.

4) நானும், 1வது எதிர் மனுதாரரும் பிரிந்து சுமார் 10 வருடங்கள் ஆகிவிட்டன. 1வது எதிர் மனுதாரர் குடிப்பழக்கத்திற்கு அடிமையானவர் என்பதற்கான மருத்துவ சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கடந்த 01.02.2021ம் தேதி 1வது எதிர் மனுதாரர் என்னை தாக்கியதற்காக திருவில்லிபுத்தூர் மாண்புமிகு மகிளா நீதிமன்றத்தில் Cr.No.12/2021 என்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி தேதியில் 1வது எதிர் மனுதாரர் தூத்துக்குடி சட்ட ஒழுங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தார் என்றால் சரியல்ல. எதிர் மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் பெறப்பட்ட ஆவணத்தை காண்பித்து படித்து பதில் அளிக்குமாறு கேட்டதற்கு சாட்சி படிக்க முடியாது என பதில் அளிக்கிறார்.

5) நத்தம்பட்டி காவல் நிலையத்தில் இருந்து பெறப்பட்ட தகவல் அறியும் உரிமை சட்டத்தின் பதிலில் 1வது எதிர் மனுதாரர் நான் சொல்வது போல வழக்கு சம்பவத்தில் சம்பந்தப்படவில்லை என்று அவரது பெயர் கு.எண்.12/2021ல் நீக்கம் செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவர் சம்பவத்தில் ஈடுபட்டார். அவர் சம்பவத்தில் ஈடுபடவில்லை என்பதால் தான் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் சான்றறித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நத்தம்பட்டி காவல் சார்பு ஆய்வாளர் விசாரணை செய்த பின்பு தான் இந்த ஆவணத்தை வழங்கினார் என்றால் சரியல்ல. 13.07.2021ம் தேதியிட்ட பொது தகவல் அலுவலர் அவர்களிடம் இருந்து வரப்பெற்ற

**தகவல்களின் உண்மை நகல் எ.ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் 100 நாள் வேலை நாள் திட்டத்தின் கீழ் பயனாளியாக இருக்கிறேன் என்றால் சரிதான். எனது ஊதியம் எனக்கு நேரடியாக வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும் என்றால் சரிதான். எனது வங்கிக் கணக்கு மற்றும் 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தின் பயனாளர் அட்டையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க தயாராக இருக்கிறேன் என்றால் தயாராக இருக்கிறேன். எனக்கு மாத ஊதியம் ரூ.10,000/- வருமா என்றால் இல்லை. எனக்கு மாத வருமானம் எவ்வளவு வரும் என்றால் நான் வேலைக்கு செல்லும் நாட்களைப் பொறுத்து தான் வரும். 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தின் பயனாளர் அட்டையை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தால் நான் வேலைக்கு சென்ற மற்றும் வேலைக்கு செல்லாத நாட்கள் குறித்து தெரிய வரும் என்றால் சரிதான்.

மேற்படி 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தின் பயனாளர் அட்டை மற்றும் வங்கி கணக்கு புத்தகத்தில் எனது வீட்டின் முகவரி 1/19 என்று தான் உள்ளது என்றால் திருமணத்திற்கு முன்பு நான் வசித்து வந்த முகவரி தான் மேற்படி ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது வரை மேற்படி முகவரியை ஆவணங்களில் திருத்தம் செய்யவில்லை என்றால் சரிதான். நான் ஈஞ்ச விளக்கமார் தயார் செய்யும் முறை எனக்குத் தெரியும் என்றால் சரிதான். நான் வழக்கிற்காக தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு பாய் தயார் செய்யும் முறை தெரியும் என்றால் எனக்குத் தெரியாது. ம.சா.ஆ.4 ஆவணத்தை மாண்புமிகு குடும்ப நல நீதிமன்றத்தில் தாக்கல் செய்து ஜீவானாம்சமாக மாதம் ரூ.8,000/- பெற்று வருகிறேன் என்றால் சரிதான். தற்போது 1வது எதிர் மனுதாரர் வாங்கும் மாத சம்பளத்தை நீதிமன்றத்திற்கு காண்பிக்கிறேன். இந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். ம.சா.ஆ.4 ஆவணத்தில் 1வது எதிர் மனுதாரரின் மாத ஊதியத்தில் கட்டாய பிடித்தமாக ரூ.15,544/- பிடித்தம் செய்யப்படுகிறது என பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1வது எதிர் மனுதாரருக்கு விதவை தாய் இருக்கிறார் என்றால் சரிதான். 1வது எதிர் மனுதாரர் அவரது தாயாரை பராமரித்து வருகிறார் என்றால் சரியல்ல. அவருடைய தாயாருக்கு 1வது எதிர் மனுதாரர் மாதம் ரூ.15,000/- உணவு, உறைவிடம் மற்றும் மருத்து உதவிக்காக கொடுத்து வருகிறார் என்றால் சரியல்ல.

நான் ஏற்கனவே மாண்புமிகு திருவில்லிபுத்தூர் குடும்ப நல நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கின் மூலமாக 1வது எதிர் மனுதாரரிடம் இருந்து ஜீவனாம்சம்

பெற்று வருவதால் இந்த வழக்கில் ஜீவானம்சம் பெற சட்ட தகுதி இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் மாண்புமிகு திருவில்லிபுத்தூர் குடும்ப நல நீதிமன்றத்தில் தாக்கல் செய்து ஜீவனாம்சம் பெற்ற வந்த விபரங்களை இந்த வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு கிழக்கு காடனேரியிலும், இந்திரா குடியிருப்பிலும் வீடுகள் உள்ளன என்றால் சரிதான். எனக்கு இரண்டு அண்ணன்கள் உள்ளார்கள். எனது தாத்தாவிற்கு காடனேரியில் சொத்துகள் உள்ளன என்றால் சரியல்ல. எனக்கு வசதி வாய்ப்புகள் உள்ளது என்றும் குடியிருக்கு வீடு உள்ளது என்றும் பொய்யான காரணத்தை கூறி மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1வது எதிர் மனுதாரருக்கு எதிராக பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கேட்கும் பரிகாரம் எதுவும் எனக்கு கிடைக்கத்தக்கது இல்லை என்றால் சரியல்ல. MC NO.15/2021 வழக்கில் சொல்லியுள்ள சங்கதிகளைத்தான் இம்மனுவில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 1வது எதிர் மனுதாரர் OS No.173/2025 என்ற வழக்கை தாக்கல் செய்த பின்பு அதற்கு போட்டியாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1வது எதிர் மனுதாரர் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்த பின்பு பல வருடங்கள் கழித்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வாழ்வுரிமை மீட்டளிப்பு பரிகாரம் கோரி தாக்கல் செய்த வழக்கின் உத்தரவில் நான் சொல்வது போல 10 பவுன் தங்க நகை, ரொக்க பணம் மற்றும் பண்ட பாத்திரங்கள் பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. உத்தரவில் சொல்லாத விபரங்களை இம்மனுவில் சொல்லி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மேற்படி உத்தரவில் HMOP NO.49/2016 உத்தரவில் நான் சொல்வது போல 10 பவுன் தங்க நகை, ரொக்க பணம் மற்றும் பண்ட பாத்திரங்கள் பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்தற்காக மேல் முறையீடு தாக்கல் செய்யவில்லை என்றால் கணவருடன் சேர்ந்து வாழ உத்தரவு பிறப்பித்ததால் தாக்கல் செய்யவில்லை. எனக்கு வசதி வாய்ப்புகள் இருக்கிறது என்றும் மேற்சொன்ன பொருட்கள் எல்லாம் என் வசம் தான் இருக்கின்றன என்றும் பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மனுவில் கோரியுள்ள பரிகாரங்களை நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது மனு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. HMOP NO.49/2016 மற்றும் HMOP NO.72/2015 பிறப்பித்த உத்தரவிற்கு எதிராக

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. பொய்யான சங்கதிகளைக் கூறி தாக்கல் செய்துள்ள இம்மனுவில் நான் கோரியுள்ள அனைத்து பரிகாரங்களும் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை : – இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒம்/–எம்.இராமநாதன்/–
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு